# யூலை – 31 – புதன்

## நம் கடவுளாகிய ஆண்டவரைப் பெருமைப்படுத்துங்கள்:
## திபா. 99:5

----------------------------------------------------------------

**முதல் வாசகம் : விடுதலைப் பயணம் 34 : 29 – 35**

மோசே சீனாய் மலையிலிருந்து இறங்கிச்செல்கையில், உடன் படிக்கைப் பலகைகள் இரண்டையும் தம்கைகளில் தாங்கிக் கொண்டிருந்தார். மோசே கடவுளோடு பேசியதால் அவர் முகத் தோற்றம் ஒளிமயமாய் இருந்தது. ஆனால் மோசே அதை அறியவில்லை. ஆரோனும் இஸ்ரயேல் மக்கள் அனைவரும் மோசேயைப் பார்த்தபோது, அவர் முகத்தோற்றம் ஒளிமயமாய் இருந்ததைக்கண்டு அவரை அணுகிச்செல்ல அஞ்சினர். ஆனால் மோசே அவர்களைக்கூப்பிட்டார். ஆரோனும் மக்கள்கூட்டமைப்பின் தலைவர்கள் அனைவரும் அவரைநோக்கி வந்தனர். மோசேயும் அவர்களிடம் பேசினார். பின்னர் இஸ்ரயேல் மக்கள் அனைவரும் அவர் அருகில் வந்தனர். அப்போது, ஆண்டவர் சீனாய்மலையில் தமக்கு அறிவித்த அனைத்தையும் அவர் அவர்களுக்குக் கட்டளையாகக் கொடுத்தார். மோசே அவர்களோடு பேசி முடித்தபின், தம் முகத்தின்மேல் ஒருமுக்காடு போட்டுக்கொண்டார். மோசே ஆண்டவரோடு உரையாடும்படி அவர் திருமுன் செல்வதுமுதல் வெளியே வருவதுவரை முக்காட்டை எடுத்து விடுவார். அங்கிருந்து வெளியேவந்து, அவருக்குக் கட்டளையிடப் பட்டவற்றை அவர் இஸ்ரயேல் மக்களுக்கு எடுத்துக்கூறுவார். இஸ்ரயேல் மக்கள் மோசேயின் முகத்தைப் பார்க்கும்போது, மோசேயின் முகத்தோற்றம் ஒளிமயமாயிருக்கும். மோசே ஆண்டவரோடு பேச்செல்லும்வரை தம்முகத்தின்மேல் மீண்டும் முக்காடு போட்டுக்கொள்வார்.

**பதில்பாடல் :** நம் கடவுளாகிய ஆண்டவரே தூயவர்

**நற்செய்தி : மத்தேயு 13 : 44 – 46**

அக்காலத்தில் இயேசு மக்களை நோக்கிக் கூறியதாவது : ”ஒருவர் நிலத்தில் மறைந்திருந்த புதையல் ஒன்றைக் கண்டுபிடிக்கிறார். அவர் அதை மூடி மறைத்துவிட்டு மகிழ்ச்சியுடன் போய்த் தமக்குள்ள யாவற்றையும்விற்று அந்தநிலத்தை வாங்கிக்கொள்கிறார். விண்ணரசு இப்புதையலுக்கு ஒப்பாகும். ”வணிகர் ஒருவர் நல்முத்துகளைத் தேடிச்செல்கிறார். விலை உயர்ந்த ஒருமுத்தைக் கண்டவுடன் அவர் போய்த் தமக்குள் யாவற்றையும் விற்று அதை வாங்கிக்கொள்கிறார். விண்ணரசு அந்நிகழ்ச்சிக்கு ஒப்பாகும்” என்றார்.

**தியானம்:** பழங்காலத்தில் முத்துக்கள் மக்கள் மனதில் உயர்ந்த இடத்தைப் பெற்றிருந்தது. மக்கள் அனைவரும் விலையுயர்ந்த, அழகான முத்துக்களை சேர்ப்பதில் அதிக ஆர்வம் கொண்டிருந்தனர். விலையுயர்ந்த, அழகான முத்தை கையில் வைத்திருப்பதையே அவர்கள் மிக உயர்வாகவும், பெரும்பேறாகவும் கருதினர். பொதுவாக செங்கடல் அவர்களுக்கு முத்துக்களை தரும் இடமாக இருந்தது. ஆனால், பெரிய வியாபாரிகள் தாங்கள் வாணிபத்திற்காக வெளியே செல்லும் போது, இது போன்ற அழகான முத்துக்களை சேகரித்து, தங்கள் நாட்டிற்கு கொண்டு வருவதை பெரும் பேறாக நினைத்தனர். விண்ணரசு இத்தகைய விலையுயர்ந்த முத்துக்களுக்கு ஒப்பிடப்படுகிறது. பழங்கால மக்களுக்கு விலையுயர்ந்த இந்த முத்துக்கள் தான் மகிழ்ச்சியின் நிறைவைத்தந்தது. அதைத் தேடுவதற்காக எவ்வளவு பெரிய தியாகத்தையும் செய்வதற்கு அவர்கள் தயாராக இருந்தனர். எவ்வளவு கஷ்டங்களையும் தாங்கிக் கொண்டனர். அதைவிட மிகப்பெரிய இன்பம், மகிழ்ச்சி அவர்களுக்கு இல்லை. அதைவிட அழகு வேறு எங்கும் அவர்களைப் பொறுத்தவரையில் இல்லை. இதை விண்ணரசோடு ஒப்பிடுவோம். விண்ணரசு என்பது கடவுளின் விருப்பத்தை ஏற்று அதை செயல்படுத்துவதாகும். அதாவது கடவுளின் விருப்பத்தை செயல்படுத்துவது ஒரு வேண்டா வெறுப்பாக செய்வது அல்ல, கடினமான சுமையாக இருப்பது அல்ல, மாறாக, அது முழு மகிழ்ச்சியை தரக்கூடிய பணி. எவ்வாறு கடினமான முயற்சிகள் மேற்கொண்டு விலையுயர்ந்த முத்துக்களைச் சேர்ப்பது ஒருவருக்கு மிகப்பெரிய மகிழ்ச்சியைத்தருமோ, அதேபோலத்தான் கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றி பெறுகின்ற விண்ணரசும். நமக்கு மகிழ்ச்சியையும், மனநிறைவையும் தருகிறது. கடவுளின் விருப்பத்தை அறிந்து, அதை செயல்படுத்துவது என்பது நமக்கு கொடுக்கப்படுகிற மிகப்பெரிய பாக்கியம். அதற்கு ஈடாக இந்த உலகத்தில் எதுவும் இருக்க முடியாது. அதற்காக எதை இழந்தாலும் அது தகும். அத்தகைய மனநிலையைப் பெற இறைவனிடம் மன்றாடுவோம்.